1987 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்படி ஒரு முடிவை எடுக்க முடியாது என்று கருதுகிறேன். அதற்கான குறிப்பு இங்கே இல்லை. இருந்தாலும், தகுதியான வர்கள் யார் யார் என்பதைப் பார்த்து, யார் யார் மனுச் செய் கிறார்களோ, அவர்களிலிருந்து பொறுக்கி எடுப்பதுதான் சரி யாக இருக்கும் என்று கருதுகிறேன். எனவே இதைப் பற்றி தனி யாக ஆய்வு செய்யலாம்.

தேயிலை உற்பத்தியில் தேக்கம்.

343—(*வினா எண் 6988) திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அண்மையில் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட தேக்கத்தைத் தடுக்க எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற் சாலையைப் பொறுத்தமட்டில், தேயிலைத் தூள் உற்பத்தியில் அண்மையில் தேக்க நிலை எதுவும் ஏற்படவில்லை.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கக் கூடிய உபாசி போன்ற நிறுவனங்கள் உற்பத்தி செய்த தேயிலையை விற்க முடியாமல் தேக்கம் அடைந்து, தொழிலாளர் களுக்குக் குறைந்த கூலியைத் தந்தும் தொழிலாளர்களை வேலை யிலிருந்து நீக்கம் செய்வதையும் அரசு அறியுமா? இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய ஆவலாக உள்ளேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்ட கேள்வி, உற்பத்தியிலே ஏதாவது தேக்கம் இருக்கிறதா என்று கேட்டார்கள். உற்பத்தியிலே தேக்கம் இல்லை. விற்பனையைப் பொறுத்தவரை அது நம்முடைய கையிலே இல்லாததால் அந்தந்த சூழ்நிலைக் கேற்ப அனுசரித்து நாம் செய்யவேண்டியிருக்கிறது. தொழி லாளர்களை வேலைநீக்கம் செய்கிறார்கள் என்பதற்கான குறிப்பு

என்னிடத்திலே இல்லை. இதுகுறித்து தொழிலாளர் துறையிலே யிருந்து குறிப்பு தருவார்களேயானால் முறையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டிருக்கக்கூடிய அனைத்து நபர்களுக்கும் ஒரு நலன் விளைவிக்கக்கூடிய முறையிலே தேயிலைத் தோட்டங்களை தேசியமயமாக்கக்கூடிய ஒரு கொள்கையை அரசு ஆராய்ந்து ஆணையிட உள்ளதா என்பதை நான் அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு முறை இப்போது நம்முடைய ஆலோசனையில் இல்லை. எல்லாவற்றையும் தேசிய மயமாக்கிவிடுவது என்பது நிச்சயமாக அரசாங்கத்திற்கும் நல்லதல்ல; பொது மக்களுக்கும் நல்லதல்ல. சில பொறுப்புகளை தனியாரும் ஏற்றுக்கொண்டால் அதைப் பொறுப்போடு செய்ய வேண்டும். அதைப் பொறுப்போடும் முறையோடும் செய்கிறார்களா என்பதை கண்காணிக்கின்ற முறையை அரசாங்கம் கொஞ்சம் கடுமையாக்க வேண்டும்; அதைச் செயல் படுத்த வேண்டும்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தியிலே தேக்கம் இல்லை; விற்பனை யிலேதான் தேக்கம் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக, இந்தியாவிலேயே அதிக மான சிறு விவசாயிகள் தேயிலை உற்பத்தி செய்கின்ற இடம் நீலகிரி மாவட்டம்தான். அந்த சிறு விவசாயிகள் கூட்டுறவு மூலமாக தேயிலை உற்பத்தி செய்வதிலே, தொழிற்சாலையிலே தேயிலை தேங்கிவிடுவதாலே, பச்சை தேயிலையை மிகவும் குறைந்த விலைக்கு ரூ. 3, ரூ. 3.50-க்கு விற்கின்ற கட்டாயம் இவர்களுக்கு ஏற்படுகிறது. அதிலிருந்து அவர்களைக் காப்பாற்று வதற்கு இந்த கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையை, மற்ற கம்பெனிகளில் வாங்குவதைத் தவிர்த்து, இந்தக் கூட்டுறவுத் துறையிலே இருக்கக்கூடிய

1987 ஏப்ரல் 8]

தேயிலையைச் சிவில் சப்ளைஸ் நிறுவனம் வாங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி ஆலோசிக்கலாம். ஆனால் இப்போது தேக்க நிலை என்று சொன்னால், விற்காமல் இல்லை. உற்பத்தி செய்யப்படுகின்ற அத்தனை தேயிலையும் விற்கப்பட்டு விடுகிறது. ஆனால் விலை மட்டும் குறைவாக இருக்கிறது. அதைத் தான் இங்கே சொல்கிறார்கள். சிவில் சப்ளைஸில் நாம் தருகிற போது அன்றைக்கு மார்க்கெட்டிலே விலை எப்படி இருக்கிறதோ அந்தக் கொடுத்துத்தான் வாங்குகிறோம். எனவே அப்படி பார்க்கிறபோது, இங்கே வாங்குவதும், அங்கே வாங்குவதும் ஒன்றாகத்தான் இருக்கும். விற்பனை தேங்கி விடவில்லை. விலை குறைவாக இருக்கிறது. எனவே நாமே நேரடியாக வாங்கினாலும் கூட விலையை நிச்சயமாக கூட்டிக் கொடுக்கக்கூடிய நிலையில் சிவில் சப்ளைஸ் இருக்காது என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். எனவே விற்பனையிலே ஏதாவது சிரமம் இருந்து, உற்பத்தியான பொருள் வெளியிலே விற்கமுடியாத நிலை இருக்குமேயானால் இந்த அரசும் அதற்கு சித்தமாய் இருக்கிறது. தற்போது எல்லாம் விற்பனையாகிக் கொண்டிருக்கிற காரணத்தால் அதிலே அவ்வளவு பெரிய பிரச்சினை ஏற்படாது என்று கருதுகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நெடுகுளா கிராமத்தில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை.

343—(* வினா எண் 11881) திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுகுளா கிராமப் பகுதியில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?